DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Civil Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

# O.S.No.220 of 2023

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of D.W.4 | } | Defence |
| | } | |
| Name of the Witness | : | **திரு.ஆனந்தன்** |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 10.03.2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் பாகல அள்ளி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சர்வே எண்.176/1 ஏ, 176/1 பி, 185 ஏ3ஏ, 186/2, 187/3 ஆகிய

நிலங்களுக்கு அ–பதிவேடு **Ex.X11**, கை சிட்டா **Ex.X12**, கணினி சிட்டா **Ex.X13,** அடங்கல் **Ex.X14,** புல வரைபடம் **Ex.X15.** வாதி தரப்பில் இந்த ஆவணங்களை சாட்சி மூலமாக ஆஜர்படுத்தப்பட சம்மனில் குறிப்பிடப்படவில்லை என்பதால் இந்த ஆவணங்களை குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபணைக்கும் நிரூபனத்திற்கும் உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது.

சர்வே எண்.176/1 ஏ ல் கோழி பண்ணை உள்ளது, அந்த சர்வே எண். பழனிசாமி மனைவி விஜயசாந்தி பெயரில் உள்ளது. அது தற்போது யார் அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)**

யுடிஆர் அ–பதிவேட்டில் சர்வே எண்.159/2 பே.சித்தன் பெயரில் உள்ளது. சர்வே எண்.176/1 ஏ க.சித்தன் பெயரில் உள்ளது. சர்வே எண்.176/1பி மா.சுப்ரமணியம் பெயரில் உள்ளது. சர்வே எண்.176/2 ஏ மா.சுப்ரமணியம் பெயரில் உள்ளது. சர்வே எண்.176/2 பி க.சித்தன் பெயரில் உள்ளது. சர்வே எண்.185/ஏ3 சித்தன், சாந்தா, பெரியண்ணன், அபிமன்னன், சி.அயோத்தி, முனுசாமி பெயரில் உள்ளது. சர்வே எண்.186/2 பே.சித்தன், சா.சாந்தா, சி.பெரியண்ணன், சி.அபிமன்னன், சி.அயோத்தி, சி.முனுசாமி

பெயரில் உள்ளது. சர்வே எண்.186/6 பே.சித்தன் பெயரில் உள்ளது. சர்வே எண்.187/3 த.குட்டிபையன், த.கண்ணுபையன் பெயரில் உள்ளது. சர்வே எண்.187/2 பே.சித்தன் பெயரில் உள்ளது.

சர்வே எண்.176/1 ஏ, 176/1 பி புல வரைபடத்தில் மேற்கூரை உள்ளதாக பதிவு இல்லை என்றால் சரிதான். இது தற்போதைய வரைபடம்தான். அடங்கலில் கட்டிடம், மேற்கூரை காட்டி இருந்தால் அதை அனுசரித்து புல வரைபடத்தில் காட்டப்பட வேண்டும் என்றால் சரிதான். ஆனால் மேற்சொன்ன சர்வே எண்களில் தற்கால புல வரைபடங்களில் மேற்கூரை கட்டிடம் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

சர்வே எண்.176/1 ஏ யுடிஆர்–ல் க.சித்தன் பெயரில் உள்ளது, தற்போது விஜயசாந்தி பெயரில் உள்ளது.

சர்வே எண்.176/2 பி யுடிஆர்–ல் க.சித்தன் பெயரில் உள்ளது, தற்போது விஜயசாந்தி பெயரில் உள்ளது.

சர்வே எண்.159/2 யுடிஆர்–ல் பே.சித்தன் பெயரில் உள்ளது, தற்போது பொன்னுசாமி மகன் கந்தசாமி பெயரில் உள்ளது.

சர்வே எண்.186/6 யுடிஆர்–ல் பே.சித்தன் பெயரில் உள்ளது, தற்போது சித்தன் மகன் ராஜேந்திரன் பெயரில் உள்ளது.

சர்வே எண்.187/2 யுடிஆர்–ல் பே.சித்தன் பெயரில் உள்ளது, தற்போது சித்தன் மகன் ராஜேந்திரன் பெயரில் உள்ளது.

சர்வே எண்.187/3 யுடிஆர்–ல் கந்தகவுண்டர் மகன் குட்டிபையன், நடுப்பையன் பெயரில் உள்ளது, தற்போது கந்தகவுண்டர் மகன் குட்டிபையன், நடுப்பையன், சித்தன் மகன் ராஜேந்திரன், சாரதா சித்தன் பெயரில் உள்ளது.

சர்வே எண்.185/ஏ3ஏ யுடிஆர்–ல் பே.சித்தன், சா.சாரதா, சின்ன காவேரியப்பன் மகன் பெரியண்ணன், சின்ன காவேரியப்பன் மகன் அபிமன்னன், சின்ன காவேரியப்பன் மகன் அயோத்தி, சின்ன காவேரியப்பன் மகன் முனுசாமி பெயரில் உள்ளது, தற்போது பே.சித்தன், சா.சாரதா, சின்ன காவேரியப்பன் மகன் பெரியண்ணன், சின்ன காவேரியப்பன் மகன் அபிமன்னன், சின்ன காவேரியப்பன் மகன் அயோத்தி, சின்ன காவேரியப்பன் மகன் முனுசாமி, சித்தன் மகன் ராஜேந்திரன் பெயரில் உள்ளது.

யுடிஆர் லிருந்து எப்படி பெயர் மாறியது என்று எந்த குறிப்பும் நான் எடுத்து வந்த ஆவணங்களில் இல்லை. பட்டா, சிட்டாவில் பெயர் மாற்றம் ஏற்பட வேண்டும் என்றால் உரிமை மாற்று ஆவணம் இருந்தால் அதனை விசாரித்து வருவாய் துறை ஆவணங்களில் மாற்றம் செய்யப்படும். பட்டாதாரர் இறந்துவிட்டால் அவருடைய இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ்

அடிப்படையில் விசாரணை செய்து வருவாய் துறை ஆவணங்களை மாற்றம் செய்வோம். இந்த வழக்கில் சொத்துக்கள் யுடிஆர் லிருந்து உரிமை மாற்று ஆவணங்கள் மூலமாக அல்லது வாரிசுதாரர்களின் அடிப்படையில் வருவாய் துறை ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்டதா என்று என்னால் சொல்ல இயலாது. பட்டா மாறுதல் செய்ய வேண்டும் என்றால் தாசில்தார் உத்தரவு போட்டுத்தான் செய்ய முடியும் என்றால் சரிதான்.

நான் எடுத்து வந்த ஆவணங்களில் பட்டா மாற்றம் எந்த உத்தரவின் அடிப்படையில் எந்த நாளில் ஏற்பட்டது என்ற குறிப்புகள் இருக்க வேண்டும் என்றால் சரிதான். ஆனால் நான் எடுத்து வந்த ஆவணங்களில் இல்லை. அவை அலுவலக நகல்கள். Ex.X13 யை தவிர நான் எடுத்து வந்த அனைத்து ஆவணங்களிலும் நான் சான்றிட்டு கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். Ex.X13 ல் மட்டும் ஏன் சான்றிட்டு கையொப்பம் செய்யவில்லை என்று காரணம் அதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். Ex.X13 நீதிமன்ற சான்றாவணமாக ஏற்று கொள்ள முடியாது என்றால் சரியல்ல. எனக்கு நீதிமன்றத்திலிருந்து வந்த சம்மனில் ஆவணங்கள் எடுத்து வந்து சாட்சியம் அளிக்க வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான்

**பிரதிவாதிகளுக்கு ஆதரவாக அவருடைய வற்புறுத்தலின் பேரில் ஆவணங்கள் எடுத்து வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை</u> – இல்லை**

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.